PSC/DIS/06/IO/2023
அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 1200/9,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2023.09.04

அனைத்து அமைச்சு செயலாளர்கள்
அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்வதற்கு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்**

மேற்படி விடயம் குறித்த எனது சமவிலக்க மற்றும் 2023.07.19 ஆம் திகதிய கடிதம் தொடர்பிலாகும்.

02. குறித்த கடிதம் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்வதற்கு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஏற்புடைய விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவர், அமைச்சு செயலாளர் மற்றும் நிருவாக அதிகாரி மூலம் அனுப்பி வைப்பதற்கு எடுக்கும் காலத்தைக் கருத்திற் கொண்டு குறித்த விண்ணப்பங்களைக் கோரும் **இறுதித் திகதியை 2023.09.25 ஆம் திகதி வரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை** அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமையத் தயவுடன் அறியத் தருகிறேன்.

03. இது தொடர்பில் தங்களது கவனத்தை செலுத்தி, தங்களுக்குக் கீழ் செயற்படும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துமாறும், அதற்கமைய சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை 2023.09.25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு மேலும் தயவுடன் அறியத் தருகிறேன்.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு